# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
ஆடி 2
ஷஃபா 9
ஞாயிறு (16-7-1978)
நிறுவியது 1947
புத்தகம் 32
இதழ் 13

விலை சதம் 60


## அடிமைத்தளையை மேலும் இறுக்குகிறது

# புதிய அரசியலமைப்பு சட்டம்!

## தமிழ் ஈழமும், சிங்கள சிறீலங்காவின் ஆள்புலமாம்!
## சிங்கக்கொடியே 'தேசியக்' கொடியாம்!
## 'சிறீலங்கா கீதமே' நமக்கும் தேசியக் கீதமாம்!

### தமிழினத்தின் சுதந்திரக் கோரிக்கைக்கு சவால் விடுகிறது புதிய அரசியலமைப்பு!

ஐ. தே. க. அரசின் புதிய அரசியலமைப்பு தமிழ் தேசிய இனத்தின் அடிமைத்தளையை மேலும் இறுக்குவதாகவும், இலங்கை 'ஒரே நாடு' என்ற சிங்கள பௌத்த ஏகாதிபத்தியக் கொள்கையை மேலும் வலுப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. தமிழ்ஈழப்பகுதிகளையும் சிங்கள சிறீலங்காவின் ஆள்புலமாக புதிய அரசியலமைப்பு குறிப்பிடுகிறது. 1972ம் ஆண்டின் அரசியலமைப்பில் இவ்வாறு குறிப்பிடப்படவில்லையென்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

தமிழினத்தின் தமிழ்ஈழ சுதந்திரக்கோரிக்கைக்கு சவால் விடும் தோரணையில் அமைந்துள்ள புதிய அரசியலமைப்பு தமிழ் மக்களின் அடிமைத்தளையை மேலும் இறுக்குவதாகவே அமைந்துள்ளது.

சிறீலங்கா, தமிழ்ஈழம் என்ற இரண்டு வெவ்வேறு நாடுகளைக் கொண்ட ஒரு தீவாகசரித்திரகாலம் முதல் இலங்கை இருந்து வருகிறது. ஆனால் புதிய அரசியலமைப்பு சிங்கள ஏகாதிபத்திய விஸ்தரிப்புக் கொள்கைக்கு மேலும் பலம் சேர்க்கும் வகையில் தமிழ் ஈழத்தையும் 'சிறீலங்காவின், ஆள்புலமாகக் குறிப்பிடுகிறது, இது ஓர் ஆக்கிரமிப்பாகும்!

"இலங்கைக் குடியரசின் ஆள்புலமானது இருபத்திநான்கு நிருவாக மாவட்டங்களையும் அதன் ஆள்புல நீர்ப்பரப்புக்களையும் கொள்ளப்படத்தக்க வேறு அத்தகைய ஆள்புலத்தையும் கொண்டிருக்கும்"

(விதி 5)

இதன்படி "தமிழ்ஈழமும்" அதாவது இன்றைய தமிழ் மாவட்டங்களும் 'சிறீலங்காவின்' ஆள்புலமாக அரசியலமைப்பிலேயே குறிக்கப்பட்டுள்ளது. இது தமிழ் மக்கள் 1977 ஆடிப்பொதுத் தேர்தலில் அளித்த ஜனநாயகத் தீர்ப்புக்கு விடப்பட்டுள்ள ஒரு சவாலாகும். அப்பட்டமான ஓர் ஆக்கிரமிப்பாகும். தமிழ் ஈழத்தின் பிரதிநிதிகளின் இணக்கமோ சம்மதமோ இன்றி தமிழ் ஈழப்பிரதேசங்கள், சிங்கள சிறீலங்காவின் ஆள்புலமாக

—8ம் பக்கம் பார்க்க

# நீதி வென்றது!

### துரையப்பா கொலை வழக்கில் 4 இளைஞர்கள் விடுதலை!

கொழும்பு மேல்நீதி மன்றத்தில் நடைபெற்று வரும் துரையப்பா கொலை வழக்கில், முறையே 2ம், 3ம், 4ம், 5ம் எதிரிகளாக குறிப்பிடப்பட்டிருந்த வி, ஏ. கிருபாகரன், எஸ். லோகநாதன், வை. சிறீதரன், த. சந்ததியார் ஆகியோர் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இடைநடுவில் நீதிபதி ஜே. எப். ஏ. சூசாவினால் 12-7-78ல் விடுதலை செய்யப்பட்டனர்.

முதலாம் எதிரியாகக்குறிப்பிடப்பட்டுள்ள பாலசுப்பிரமணியம் கலாபதி மீதான

—5-ம் பக்கம் பார்க்க

## தமிழர் விடுதலைக் கூட்டணியின் புதிய தலைவராக நல்லூர் சிவா! செயலதிபராக அமிர்தலிங்கம்!

வவுனியா நகரசபை மண்டபத்தில் 15-7-78சனிக்கிழமை காலை நடைபெறும் த.வி. கூட்டணியின் பொதுக் கூட்டத்தில் இயக்கத்தின் புதிய அமைப்பு விதிகளின்படி இயக்க அலுவலாளர்கள் தெரிவு செய்யப்படவிருக்கின்றனர்.

கூட்டணியின் புதிய தலைவராக நல்லூர் பா.உ. திரு. மு. சிவசிதம்பரம் அவர்களும் செயலதிபராக எதிர்க்கட்சித்தலைவர் திரு. அமிர்தலிங்கமும் ஏகமனதாக தெரிவு செய்யப்படுவார்கள் என்று தெரிய வருகிறது. இவர்கள் இருவரின் பெயரையும் முறையே தலைவர், செயலதிபர் பதவிகளுக்கு மட்டக்களப்பு முதல்வர் பா.உ. திரு. இராசதுரை உட்பட எட்டுப் பா.உ.க்கள் முன் மொழிந்துள்ளனர்.

மற்றும், கூட்டணியின் சிரேட்ட உபதலைவர், 4 துணைத் தலைவர்கள், ஐந்து துணைச் செயலாளர்கள், பொருளாளர், 5 மத்திய செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோர் இக் கூட்டத்தில் தெரிவு செய்யப்படுவர்.

கூட்டணியின் இரண்டாவது தேசிய மாநாடு ஆவரங்காலில் இம்மாதம் 29, 30ம் திகதிகளில் சீரும் சிறப்புமாக நடைபெறஏற்பாடுகள் நடை பெற்று வருகின்றன.

### விடுதலையான இளைஞர்களும் கலாபதியும்



துரையப்பா கொலை வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்ட சந்ததியார், சிறீதரன், லோகநாதன், கிருபாகரன் ஆகியோரையும் வழக்கின் முதலாம் எதிரியான கலாபதியையும், படத்தில் காணலாம்.

**10-7-78**

முதல் சுதந்திரன்

புதிய முகவரி:-

5, மகாத்மா காந்தி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நாம் தமிழர்கள்' என்ற இன உணர்வை என்றைக்கும் நாம் இழந்துவிடக்கூடாது! உண்மையான தமிழ் தனித் தமிழே!



பேரன்புக்கும், பெருமதிப்புக்குமுரிய தலைவர் அவர்களே! இங்கே குழுமியிருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள், மதிப்புக்குரிய தமிழ்த் தலைவர்களே! தமிழ் அறிஞர் பெருமக்களே, தமிழ்த் தாய்மார்களே, மாணவச் செல்வங்களே!

உங்கள் அனைவருக்கும் தமிழீழத்துக்கு வந்து உங்களையெல்லாம் நேரடியாகப் பார்த்து, உங்களோடு உறவாடி, உங்கள் உணர்ச்சிகளைப் பகிர்ந்து செல்கின்ற இந்த இறுதி நிகழ்ச்சியிலே, விடைபெறுகின்ற நோக்கோடு, உங்களிடம் என்றென்றும் இருக்கின்ற தமிழ் உணர்வுக்காகவும், ஒரு தாய்ப்பாசத்திற்காகவும் எப்பொழுதும் நானும், அங்கு தமிழகத்திலேயிருக்கின்ற நம் உடன் பிறப்புக்களும், தலைவர்களும் நீங்கள் நினைக்கின்ற போது ஆறுதலுக்காகவும், அணைப்புக்காகவும், உதவிக்காகவும் நினைத்தவுடன் வருவோம் என்கின்ற உறுதியுடனும், உங்களையெல்லாம் விட்டு நான் பிரிந்து போகின்ற ஒரு நிலையிலே நீங்கள் நினைவில் வைத்திருக்கின்ற வகையில் சில கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள விரும்புகின்றேன். அந்த முறையில் இந்தக் கூட்டத்தை அமைத்துக் கொடுத்த ஈழத் தமிழ் எழுத்தாளர்பேரவைச் செயலாளர் கோவை மகேசன் அவர்களுக்கு என் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரியார்களே! இங்கே தலைவர் அவர்கள் பேசுகிற பொழுதும், இந்த ஈழத்தமிழினத்தை எவ்வாறேனும் கைதூக்கிவிட்டுவிட வேண்டுமென்று இரவு—பகல் ஒரே எண்ணமாக உழைத்து வருகின்ற தலைவர். அமிர்தலிங்கம் அவர்கள் பேசுகின்ற பொழுதும் நம் தமிழ்மொழியை எந்த அளவுக்குப் பெருமையாக நினைக்க வேண்டும் என்பது பற்றிச்சில கருத்துக்களைச் சொன்னார்கள். அந்த வகையிலே, என்னை ஓர் அன்பின் அடிப்படையிலே அளவு கடந்துபாராட்டியும் உரைத்தார்கள் என்று கருதுகிறேன். அவர்களுடைய உண்மையான பாராட்டுதலுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்ள வேண்டுமானால் என்னுடைய கடமையில் நான் இன்னும் ஆழமாகவும், மிகவும் ஆர்வமாகவும் ஈடுபட வேண்டும். அந்த உறவுமுறைப்பார்த்து, நாம்

திலைத்தான் அவர்களுடைய பாராட்டு எனக்குக் கொடுத்தது என்று கூறிக்கொண்டு அவர்களுக்காக என் நெஞ்சு நிறைந்த நன்றியறிதலையும் தெரிவித்துக்கொண்டு உங்களிடையே நான் பேச வந்த அந்தத் தலைப்பின் அடிப்படையிலே சில கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள விரும்புகிறேன்.

பெரியோர்களே! நாம் தமிழர்கள்; தமிழர்கள் என்று சொன்னவுடனேயே நம்மை ஏதோ பிரிவினையுணர்ச்சியுடையவர்கள் என்றும் அல்லது ஏதோ வேறு ஓர் இனத்திற்கு மாறுபட்டவர்கள் என்றும் நினைத்துக் கொள்கிறவர்கள் சிலர் இங்கே இருக்கலாம்; ஆனால் மற்றவர்கள் நினைத்துக்கொள்கிற வகையிலே அவர்களுடைய உள்ளம் ஒரு இனத்தைத் தாழ்த்துவதற்காகவோ, அல்லது ஒரு இனத்தினின்றும் பிரிந்து வாழ்வதற்காகவோ நாம் நம்முடைய தாய் மொழியுணர்வை அதிகமாக்கிக் கொண்டிருக்கிறோம் என்றோ அல்லது நம்முடைய இன உணர்வை நாம் புதுக்கிக் கொள்கிறோம் என்றோ சிலர் நினைத்தால் அது அவர்களுடைய எண்ணத்திலே, அவர்களுடைய உள்ளத்திலே, அறிவிலே ஏதோ குறைகள் உள்ளன என்பதைக்காட்டும். மற்றப்படி நாம் இங்கு உரையாடிக் கொள்வது நம்முடைய உண்மையான உணர்வின் ஆழத்திலே பதிந்து கிடக்கின்ற இரத்த பாசத்தைத்தான் உணர்த்தும். உங்களை நானோ என்னை நீங்களோ எந்த வகையாலும் தூண்டி விட்டுவிட முடியாது. எனவே உறவுமுறைப்

கின்ற ஒரு சொல்தான் என்பதை நீங்கள் மறக்க மாட்டீர்கள், மறுக்கவும் மாட்டீர்கள் என்று கருதுகிறேன். தமிழ்மொழி என்பதைத்தான் இப்பொழுது தனித் தமிழ் என்று சொல்லிக் காட்ட வேண்டியிருக்கிறது. அதாவது ஒருவன் பால் விற்றுக் கொண்டிருந்தான். அந்தப்பாலை விளம்பரப்படுத்துவதற்காக "இந்தக் கடையிலே பசும் பால் கிடைக்கும்" என்று எழுதி வைத்திருந்தான். இன்னொருவன் அவனுக்கு எதிர்க்கடையாக ஒரு கடை போட்டு "இந்தக் கடையிலே நல்ல பசும்பால் கிடைக்கும்" என்று எழுதினான். உடனே இந்த முதல் கடையைப் போட்டவனுக்கு ஒருவருத்தம், உண்மையான பசும்பாலை நாம்தானே விற்கிறோம். அவன் நம்மை ஒரு போட்டி மனப்பான்மையோடு எதிர்க்கிறானே, நாம் பசும்பால் கிடைக்குமென்று போட்டிருக்கிறோம். அவன் நல்ல பசும்பால் கிடைக்குமென்று போட்டிருக்கிறானே ஆனால் அவன் தண்ணீர் கலந்த பாலைத் தருகிறானே. நாம் அன்றோ உண்மையான பாலைத்தருகிறோம், இதை எப்படி மக்களுக்குத் தெரிவிப்பது? என்று எண்ணி இந்த "பசும்பால் கிடைக்கும்" என்ற தொடரோடு, "தூய தனிப்பசும்பால் கிடைக்கும்" என்று எழுதினான். அதாவது உண்மையான தமிழ்மொழியை நாம் இடைக்காலத்திலே வேறு வகையாகக்கலந்தும், சிதைத்தும் தாறுமாறாக உருமாற்றியும் பேசி வந்ததனால் நாம் பேசுகின்ற மொழி உண்மையான தமிழ் மொழி அன்று, உண்மையான தமிழ்மொழி என்பது இதுதான் என்பதை மக்களுக்கு அறிவுறுத்துகின்ற வகையிலே 'தனித் தமிழ்' என்று ஒரு சொல்லைப்போட வேண்டியிருந்

ஓரிரண்டு சொற்கள் மட்டுந்தான் தமிழ்ச் சொற்களாக இருக்கும். அந்த அளவிலே நாம் தமிழைக் கலந்தும், சிதைத்தும் பேசிவருகின்றதனால் தூய தமிழ், தனித்தமிழ் என்று சொல்வதற்கான ஒரு தேவை ஏற்பட்டது. எனவே தனித்தமிழ் என்று சொன்னவுடனேயே இது ஒரு அடாத முயற்சியென்றும், அல்லது இயற்கைக்கு மாறான முயற்சியென்றும், அல்லது அறிவியலுக்கு மாறான முயற்சியென்றும், அல்லது மக்கள் இந்தக்காலப் போக்கிலே செய்யக்கூடாத ஏதோ ஒரு பிழையைச் செய்கின்ற முயற்சியென்றும் நீங்கள் நினைத்துக்கொள்ளக் கூடாது.

அதேபொழுது பண்டிதரவர்கள் சொல்கின்றபோது வேறு சில சொற்களைச் சொல்லி, நாங்கள் சிலசொற்களை உருவாக்கிப் பேசுகின்றோம் என்று சொன்னார்கள். தேவநேயப்பாவணர் அவர்களை உங்களிலே சிலர் தெரிந்து இருக்கலாம். அவர் மறைமலை அடிகளாருக்குப் பின் தூய தமிழ் வளர்ச்சியினுடைய நிலையிலே மிகவும் அக்கறை கொண்டு, மொழி ஆராய்ச்சியின் அடிப்படையிலே பல நூல்களை எழுதிவருகிறார். அவர் என்னுடைய ஆசிரியர். நானும் அவரும் சேர்ந்து கொண்டு தான் அடிகளார் தொடங்கிய அந்த இயக்கத்தை மீண்டும் எவ்வாறேனும் மக்களிடத்திலே பரப்பவேண்டும்; உண்மையான தமிழ் வளர்ச்சியிலே அவர்களை ஈடுபடச் செய்யவேண்டும் என்கின்ற எண்ணத்தோடு சில முயற்சிகளைச் செய்து வந்தோம். அதன் அடிப்படையாக கடந்தபத்தொன்பது ஆண்டுகளாகத் "தென்மொழி" என்கின்ற ஒரு இலக்கிய இதழைத் தூய

ஈழத்தமிழ் எழுத்தாளர் பேரவையின் சார்பில் யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் தமிழக அறிஞர் தென்மொழி ஆசிரியர் புலவரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள், "தமிழின வரலாற்று வீழ்ச்சி" எனும் தலைப்பில் ஆற்றிய நீண்ட உரை இவ்வாரத்திலிருந்து சுதந்திரனில் தொடர்ந்து வெளியிடப்படும். முதலாவது பகுதி இங்கு இடம்பெற்றுள்ளது.—ஆர்.

மாறுபாட்டுக்கிடக்கிறது என்பதை மட்டுந்தான் நான் உங்களுக்குக் கூறமுடியும். அதற்காக நம்முடைய உடன்பிறப்பு நிலையை உறவுமுறையை நாம் மறந்துவிட முடியாது. நாம் தமிழர்கள் என்று சொல்கிறபோது நம் உள்ளத்திலே ஏற்படுகின்ற ஒரு நம்பிக்கையும் உணர்வும் இந்த இனத்தினுடைய மக்களாக இந்த உலகம் முழுவதும் பரந்து கிடக்கின்ற அத்தனை உள்ளங்களிலும் ஒரு ஆர்வத்தையும், ஒரு இன உணர்ச்சியையும், கட்டுக்கோப்பான ஒரு முன்னேற்றத்திற்கான ஒருநிலையையும் உருவாக்கித்தரும் என்று சொன்னால் அது மிகையாகாது. இந்த இன உணர்வு தான் நம்மை இன்று வரை கட்டிக்காத்தது. இனியும் கட்டிக்காக்க இருக்கிறது.

படி நாம் இப்பொழுதுபேசிக் கொள்கின்ற செய்திகள், நாம் மறந்து போன சில வரலாற்று நிலைகளை நினைவூட்டிக் கொள்வதற்கும், அதன் வழியாக நாம் நம்மை நிலைநிறுத்திக் கொள்வதற்கும் தான் சொல்லப்படுகின்றனவே தவிர, வேறு யாரையோ, அல்லது எந்தக் காரணத்தினாலோ, நம்மை அவர்கள் வேறு வகையாக நினைக்க வேண்டும் என்பதற்காகவோ நாம் சொல்லப்போவதில்லை. எனவே வரலாற்று அடிப்படையிலே சொல்லப்

எனவே இந்த உலகத்தில் வேற்று இனங்களிலே இருக்கின்ற உணர்வு நிலைகள் எப்படியோ, அதேயளவாகத் தான் நமக்கும் இன உணர்ச்சி இருக்கிறது. மற்றவர்களிடையே இல்லாத உணர்ச்சி நமக்கு இல்லை. மற்றவர்கள் அவரவர்களுடையதாய் மொழியை எப்படிப்போற்றுகிறார்களோ, அந்த அளவில் தான் நாமும் நம்முடைய தாய்மொழியைப் பாராட்டுகிறோம். இன்னும் சொன்னால் தமிழர்கள் என்றமுறையிலே உண்மையை நாம் சொல்ல வேண்டும் என்கிற ஓர் எண்ணத்திலே சொன்னால், அந்த அளவுக்குக்கூட நாம் தமிழ்மொழியை நம்முடைய தாய்மொழியைப் பேணிக் கொள்ளாதவர்களாக இருக்கிறோம்.

அப்படி இருக்கின்ற நம்

பெறுகின்ற இந்த உண்மைகளை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இதை நான் உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் உங்களிடையே எந்த வகையான அச்ச உணர்வும் இல்லாமல், அல்லது ஒரு தாழ்வான உணர்வுமில்லாமல் இந்த உண்மைகளை நீங்கள் நம் மக்களுக்கு ஆங்காங்கே எடுத்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்;

தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, தனித்தமிழ், தனித்தமிழ் என்று சில சொற்களைச் சொன்னார்கள். தனித்தமிழ் என்று சொன்னவுடனேயே நம்மில் பலருக்கு இது வேறு ஏதோ ஒரு தமிழ் போல் இருக்கிறது என்று சில கருத்துக்கள் வரலாம். ஆனால் தனித்தமிழ் என்பது [illegible]

## குதித்து குதித்து ஓடியதால் 'குதிரை' வந்தது உருண்ட கிழங்கு 'உருளைக் கிழங்கு' ஆனது!

தது. மற்றப்படி தமிழ் என்பதும், தூய தமிழ் என்பதும் உண்மையான தமிழைத் தான் குறிக்கும்.

நாம் இப்போதுபேசுகின்ற அந்தத் தமிழ்மொழி உண்மையான தமிழ் மொழி அன்று. அந்தத்தமிழ்மொழி இடைக்காலத்திலே ஏறத்தாழ நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்து படிப்படியாகக்கொஞ்சங்கொஞ்சமாகச் சிதைக்கப் பெற்றுப் பல வகையான சூழல்களில், பல வகையான மொழி நிலைகள், மொழிச் சொற்கள் அந்தத் தூய தமிழோடு வந்து கலந்ததால் கலப்பு மொழியாகப் பேசி வருகின்றோம். இப்பொழுது நாம் பேசுகின்ற அந்தப் பேச்சிலே ஒரு தொடருக்குக் குறைந்தது ஏழு, எட்டு வேறு மொழிச் சொற்கள் இருக்கும். சில சொற்கள்

தமிழிலே நடாத்தி வருகின்றோம். அந்த இதழ் தமிழைப்பொறுத்த எல்லா வகையான விளக்கங்களுக்கும் ஒரு கருவி இதழாக, அதாவது AUTHORITY என்று சொல்வார்களே, ஒரு அதிகார இதழாக இருந்து வருவதைத் தமிழகத்திலும், வேறுநாடுகளிலுள்ள தமிழர்களிலும் பலர் உணர்ந்திருப்பார்கள். அந்த இதழிலே பல சொற்களை நாம் வெளிப்படுத்தியிருக்கிறோம்.

அதாவது தலைவரவர்கள் சொன்னார்கள் காப்பி (coffee) அதாவது காப்பி என்ற சொல்லுக்குக் 'குளம்பி' என்ற சொல்லை நாம் பயன்படுத்துகிறோம். குளம்பி என்ற சொல்லை எங்களுடைய விருப்பத்திற்காகப் பயன்படுத்துகின்ற நிலையாக நீங்கள் கருதிக் கொள்ளக்

—7-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு கருத்தரங்கில் அமெரிக்க பேராசிரியர்கள் அறிவுரை!

கடந்த 8.7.78 சனிக்கிழமை மாலை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிசன் மண்டபத்தில் நடைபெற்ற தமிழர் விடுதலைக்கூட்டணியின் கொழும்புக் கிளைக்கூட்டத்தில் பங்குபற்றிய அமெரிக்க பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள் இருவர், தமிழ் ஈழத்திற்கு வெளியே வாழும் தமிழ் ஈழத்தைச் சேர்ந்த தமிழ் மக்களை கூடிய கெதியில் அவர்களது தாயகத்திற்கு திரும்பிச்செல்லுமாறு கூட்டாக வேண்டுகோள் விடுத்தனர். மேற்படி கருத்தரங்கிற்கு கொழும்புக்கிளைத்தலைவர் தமிழ் ஏந்தல் திரு, ஈழவேந்தன் தலைமை தாங்கினர்.

முதலில் உரையாற்றிய உளவியல் பேராசிரியரான வண.பிதா பிரான்சிஸ் சேவியர் அவர்கள் மிகவும்நகைச்சுவையாக உளவியல் ரீதியாக தமிழ் பேசும் மக்களை எதிர்நோக்கும் பிரச்சினைகளை எடுத்து விளக்கிப் பேசினர்: அவர் பேசுகையில்.

''அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் போது முன்னைய ஜனாதிபதி நிக்சனுக்கு எதிராகப் போட்டியிட்ட செனட்டர் மக்லண்ட் தேர்தலின் போது ''அமெரிக்க தாயகத்திற்கு வாருங்கள்'' (Come home America) என்ற கோஷத்தை எழுப்பினர். பின்னர் அடுத்துவந்த ஜனாதிபதியான ஜெரால்ட் போட்டை எதிர்த்துப் போட்டியிட்ட ஜிம்மி கார்ட்டர் இதே கோஷத்தை எழுப்பி தேர்தலில் வெற்றி பெற்றர், இன்று ஈழத் தமிழர்களுக்கும் இக்கோஷமே தேவைப்படுகிறது. ஈழத் தமிழர் தமது தாயகத்தை நோக்கி செல்ல வேண்டும்— தமது வீட்டை நோக்கி செல்ல வேண்டும்.

அமெரிக்காவில் வாழும் யூதர்கள் கடவுள் ஆராதனையின் போது இறுதியில் ''நாளைய பொழுது இஸ்ரவேலுக்காக மலர வேண்டும்'' என்று ஜெபம் செய்வார்கள். இதேபோல் ஒவ்வொரு தமிழனும் தனது கடவுள் வழிபாட்டின்போது ''தமிழ் ஈழத்திற்காக நாளையப் பொழுது மலரட்டும்'' என பிரார்த்தனை செய்ய வேண்டும்.

இன்று உலகெங்கும் விழிப்புணர்ச்சி ஏற்பட்டு வருகிறது. இதனல் உலகம் அறிவு வளர்ச்சி பெற்று வருகிறது. வாலிப உலகத்தில் இன்று வளர்ச்சி பெருமளவில் ஏற்பட்டுள்ளது. தமிழ் வாலிபர்களது மத்தியில் அறிவு வளர்ச்சி பயங்கரமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அளவில் வளர்ந்துள்ளது. அவர்கள் இன்று நீதியைத்தான் தேடுகிருர்கள். இந்த அரசாங்கம் சில சலுகைகளை வழங்கினலும் அதை ஏற்க அவர்கள் தயாராகவில்லை. அவர்கள் சமத்துவத்தை நிலை நாட்டவே விரும்புகிருர்கள்.

கொழும்பிலுள்ள ''புனித பிரிஜ்ஜஸ் மகளிர் கல்லூரி'' யில் 15 தமிழ் மாணவிகள் தே. க. பொ. த. பரீட்சையில் முதலிடத்தைப் பெற்ற போது அதைக்காண சகிக்காத பேர்வழிகள் சிலர் கழுத்தறுப்பு வேலைகளில் ஈடுபட்டார்கள், என அறிந்தேன்.

இஸ்ரவேல் மக்கள் என்ன செய்தாலும், எங்கு சென்றலும் தமது 'யூத' தன்மையை இழக்கமாட்டார்கள். அவர் தம்மை இனம் கண்டுகொண்டுதான் 'நாளை இஸ்ரவேல்' என முழங்குகிருர்கள், இதே போல் தமிழ் மக்களுக்கும் இனம் காணும் தன்மையுண்டு. அவர்களது வாழ்க்கை வெறும் பக்க வேர்களால் முளைவிட்டதல்ல; ஆணிவேரிலிருந்து விட்டதொன்றகும்.

சிலாபப் பகுதிகளில் மதமாற்றம் மொழிமாற்றம் காரணமாக ஆணிவேரை அறுத்து வெறும் பக்கவேருடன் வாழும் நிலையை உருவாக்கினர்கள். இதனல் எதிர்காலச் சந்ததியினர் ஆணிவேரற்ற சமுதாயமாக வாழ வேண்டிய ஆபத்து இருக்கிறது.

இன்று ஆட்சியாளர்கள் தமிழ் மொழியுரிமை என்று கூறி சில மயக்கங்களை ஏற்படுத்தப்பார்க்கிருர்கள். இந்த மயக்கங்களிலிருந்து தமிழர் தம்மையும் எதிர்கால சந்ததியையும் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்.

தமிழ் நாட்டில் வாழ்ந்த சமய குரவர் நால்வரும் சமணரையும் பௌத்தரையும் தமிழ் நாட்டிலிருந்து விரட்டினர்கள். அவர்களுடன் வாழ முடியாது என்றனர். பௌத்த சித்தாந்தத்தில் தெய்வீகத் தன்மையில்லை.

நான் அறிந்தவரையில் எந்தவொரு சிங்கள மேற்றிராணியாரோ வணபிதாவோ தமிழ் மக்களுக்காக இரக்கப்படுபவர்களாகக் காணப்படவில்லை.

இன்று தேசிய ஒற்றுமை என்பதை ஒரு விக்கிரக வழிபாடாகக் காட்ட முனைகிருர்கள். இப்படித்தான் பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளும் தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட ''பொது நலவாய அமைப்பை'' ஒரு விக்கிரகமாகக் காட்டிவந்தார்கள்.

இன்று சிங்களவர்கள் மத்தியில் தமிழர்களது உரிமைகளை வழங்கமுடியாத உளவியல் ரீதியான பயம் காணப்படுகிறது. பெரும்பான்மையினராகயிருந்தும் சிறுபான்மையினர்போல் பயப்படுகிருர்கள். இதனல் தமிழர்களது கோரிக்கைகளை செவிமடுக்க மறுக்கிருர்கள்.

அண்மையில் அவுஸ்திரேலியாவில் நடைபெற்றவைபவம் ஒன்றில் ஒரு தமிழ் இளைஞனைப் பார்த்து ''நீர் எந்த நாட்டைச் சேர்ந்தவன்?'' என்று ஒரு சிங்களச்சீமாட்டியார் கேட்டார். அதற்கு அந்த இளைஞன், ''நான் தமிழ்ஈழத்தைச் சேர்ந்தவன்'' என பதிலளிக்கவே அச்சீமாட்டியார் பேயறைந்தவன் போல காணப்பட்டதோடு ''தமிழர்கள் எல்லாம்வகுப்புவாதிகள்'' என்று தூற்றினர். இவ்வாருக உலகம் பூராவும் வாழும் தமிழர்கள் 'தமிழ் ஈழம்'' பற்றியே எண்ணிக் கொண்டிருக்கிருர்கள்.

தமிழ் இனம் பலமான ஆணிவேர் உடையது; எந்த சக்தியாலும் ஏமாற்ற முடியாது. தமிழர்கள் தமது இலட்சியத்திற்காக உயிர்த்தியாகம் செய்யக்கூட தயாராகவிருக்கிருர்கள். இதற்கு உலக சக்திகள் நிச்சயம் துணை நிற்கும்'' என்ருர்.

இதன்பின்னர் அமெரிக்க பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த மறையியல் பேராசிரியர் ஒருவர் (சில காரணங்களால் அவரது பெயரை இங்கு குறிப்பிடவில்லை) உரையாற்றினர்கள். அவர் பேசுகையில், கூறியதாவது:-

''வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் இங்குள்ள நிலைமைகளை மிகவும் கூர்ந்து அவதானித்த வண்ணமேயிருக்கிருர்கள். இந்து கிறீஸ்தவ மதங்கள் மனிதனை மதிக்கின்றன. ஆனல் பௌத்த மதம் மனிதனை மதிப்பதில்லை. 1925ம் ஆண்டுமுதல் தமிழ் மக்களது உரிமைகளைக் கொஞ்சம் கொஞ்சமாக பறிக்கத் தொடங்கினர்கள். அந்தக்காலத்தில் எமது தலைமைப்பீடம் சிங்களவர்களைக் கூடுதலாக நம்பிவிட்டது. ஆகவே இனியும் நம்பிக்கை வைப்பதில் அர்த்தமில்லை: த. வி. கூ. தலைவர்கள் விழிப்பாக இருக்க வேண்டிய கட்டம் இதுவாகும்,

''1000 மைல்கள் கொண்ட பயணத்தை ஒவ்வொரு அடியாகத்தான் எடுத்து வைத்து நடக்க வேண்டும்'' என்ருர் மாவோ. தமது விடுதலைப் பயணத்தில் தமிழர்கள் ஒவ்வொரு காலடியையும் கவனமாக முன்வைக்க வேண்டும். சன்சோனிக்கமிஷன் விசாரணையிலிருந்து தெரியவரும் உண்மைகளில் ஒன்று—அவர்கள் தமிழர்களை இங்கிருந்து வெளியேற்ற போட்டிருந்த திட்டமே ஆவணி. கலவரமாக அமுல் நடத்தப்பட்டது ஆகவே தமிழ்ஈழ இலட்சியத்தை விரைவு படுத்தியவர்கள் அவர்களே யாகும். ஆகவே மேலும் இழப்புக்குள்ளாகாது தமது உடமைகளுடன் வெளியூர்களில் வாழும் தமிழர்கள் தமது தாயகத்திற்கு திரும்பிவிட வேண்டும். தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் பாராளுமன்றத்திற்குள் மட்டுமன்றி வெளியேயும் பாடுபட்டால்தான் விரைவாக நாம் இலட்சியத்தில் முன்னேறலாம். எமது நிலம் எமக்கே வேண்டும் (We Want our lands back) என்பதே கோஷமாகட்டும்,

சிலர் தமிழ்ஈழம் சாத்தியமானதா? என்று கேட்கிருர்கள்? நான் அவர்களைப் பார்த்துக் கேட்கிறேன், ''இலங்கை சாத்தியமானதா? என்று; ஏன் தமிழ் ஈழம் சாத்தியப்படாது. தமிழ் ஈழத்தின் பொருளாதார வளம் ''மறைந்து கிடக்கிறது. எந்தவொரு நாடும் உருவாகுமுன்னர் சாத்தியமானதா என்று கேட்டு உருவாவதில்லை'. தமிழ்ஈழத்தின் தற்போதைய நிலப்பரப்பு ஒரு தனி நாட்டுக்குப் போதுமானது.

அமெரிக்காவில் வாழும் தமிழர்கள் பல இலட்சக் கணக்கான ரூபாய்களை செலவு செய்து தமிழ்ஈழ விடுதலைக்குப் போராடுகிருர்கள். தமிழர்களுக்கு பொருளாதார ரீதியாக புதிய அமைப்பு உருவாக வேண்டும். அந்நியனிடம் அரசாங்க உத்தியோகம் என்ற போர்வையில் காலமெல்லாம் கையேந்தி நிற்க முடியாது. ஒவ்வொரு தமிழரும் தமது சொந்தக் காலிலேயே நிற்கவேண்டும்.

வெளிநாட்டவர்களுக்கு அனுப்பும் வாழ்த்துமடல்களில், ''நான் தமிழ் ஈழத்தவன் என்னை முத்தமிடுங்கள்'' என தமிழ் இளைஞர்கள் அமெரிக்காவில் எழுதுகிருர்கள். வெளிநாட்டாருக்கு அனுப்பும் வரவேற்பு மடல்களில், ''தமிழ்ஈழ தேசத்தவர்கள் உங்களை வரவேற்கிருர்கள்'' என எழுதுகிருர்கள். இதைப்பார்க்கும் வெளிநாட்டவர்கள் ''தமிழ் ஈழம்'' பற்றி விசாரிக்கிருர்கள். ஆராய்கிருர்கள்.'' என்ருர்.

(தொகுப்பு:- பொன். பூலோகசிங்கம்)

## ''தமிழர்களே! உங்கள் தாயகத்தை நோக்கி செல்லுங்கள்!'' இதில் தாமதம் காட்டாதீர்கள்!

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மாவட்ட மந்திரி - பதவியை கூட்டணியினர் ஏற்கலாமா?

மாவட்ட மந்திரி பதவிகளை தமிழர் விடுதலைக்கூட்டணியினர் ஏற்ருல் என்ன? அப்பதவிகளை ஏற்று அதன் மூலம் கிடைக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி தமிழ் ஈழத்தின் பொருளாதாரவளத்தை முன்னேற்றிஞல் என்ன? என்ற ஒரு கருத்து— என்ற ஒரு சபலம்—தமிழ் மக்களில் சிலருக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது; கூட்டணி ஆதரவாளர்கள் ஒரு சிலருக்கு ஏற்பட்டிருக்கிறது. ஏன் கூட்டணி பா. உ.க்கள் சிலருக்கே கூட இவ்வாருன எண்ணம் அடிமனதில் மெல்ல அரும்பியிருப்பதாகக் கேள்விப்படுகிருேம்.

தமது தாயகத்தின் விடுதலைக்குப் போராடும் மக்களிடையே சில சலுகைகளை வீசி அவர்களது உள்ளங்களில் சலனங்களை ஏற்படுத்தி—இயக்கத்தை திசைதிருப்பி முறியடித்திட முயற்சிப்பது ஏகாதிபத்தியவாதிகள் கையாளும் பல்வேறு தந்திரங்களில் ஒன்ருகும்.

ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் தலைமையிலான சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு இவ்வாருன சூழ்ச்சிகள் யாவும் கைவந்த கலையென்பதை யாரும் மறுத்திடமுடியாது.

ஆயிரம்பேர் வேலைப்படிவங்கள், சமாதான நீதவான் பட்டங்கள், அரசாங்க, கூட்டுத்தாபனங்களிலும் சபைகளிலும் பதவிகள், இவைகள் எல்லாவற்றுக்கும் மேலாக இப்போது ஜே. ஆர். ஜெயவர்த்தன கையில் வைத்துக்கொண்டு காத்திருக்கும் மிகப் பெரிய தூண்டில்தான் மாவட்ட மந்திரிபதவியாகும்.

மாவட்ட மந்திரிக்கு என்னதான் அதிகாரம் வழங்கப்படுவதாகக் கூறப்பட்டபோதிலும் உத்தேசத்திட்டப்படி மாவட்டமந்திரியின் குடுமிப்பிடி சதாசர்வகாலமும் ஜனதிபதியின் கையிலேதான் இருந்துகொண்டிருக்கப் போகிறது. தனக்கு நம்பிக்கையாக, விசுவாசமாக நடக்காதவர்களை நினைத்தவுடன் எந்த நிமிடமும் மாவட்டமந்திரிபதவியிலிருந்து தூக்கியெறிய ஜனதிபதியினல் முடியும். ஜனதிபதியை எப்பொழுதும் 'தாஜா' செய்துகொண்டு யார் இருக்கிருர்களோ, அவர்களே மாவட்டமந்திரிபதவியிலே நிலைத்து நீடிக்க முடியும்.

ஒரு சுதந்திரத்தமிழ் ஈழத்தை பெற்றுத்தர—அதற்காக போராட உறுதியெடுத்து- கடந்தபொதுத் தேர்தலில் மக்களின் தெளிவான தீர்க்கமான திட்டவட்டமான ஆணையை பெற்றுக்கொண்ட தமிழர் விடுதலைக்கூட்டணி பா. உக்கள், நிச்சயம் சிறீலங்காவின் ஜனதிபதிக்கு "ஆமாம் சாமி" போடும் தலையாட்டிப் பொம்மைகளாக —ஆலவட்டம் வீசுவோராக—இருக்கமுடியாது; இருக்கவும் மாட்டார்கள்; அப்படியிருப்பதற்கு அவர்களை மக்கள் தேசிய அரசுப்பேரவைக்கு அனுப்பிவைக்கவும் இல்லை!

யானை வேட்டைக்கு என அனுப்பப்பட்ட தமிழர்விடுதலை கூட்டணியினர், நிச்சயமாக முயல்வேட்டைகளிலே ஈடுபட மாட்டார்கள் என்று நாம் திடமாக நம்புகிருேம்.

சிங்கள அரசாங்கம், தமிழ் ஈழத்தில் திட்டமிட்டு நடத்திவரும் நில ஆக்கிரமிப்பை, சிங்களக்குடியேற்றத்தை இந்த மாவட்டமந்திரி பதவி மூலம் கிடைக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி எப்படியாயினும் தடுத்துநிறுத்திவிட முயற்சிசெய்யலாம் என்ற ஒரு இதயசுத்தியான அவா சிலரிடம் காணப்படுவது உண்மையே. இப்படி ஒரு அவா, இனநலனில் அக்கறை கொண்ட யாருக்கும் ஏற்படுவது இயற்கைதான்! ஆயினும், மாவட்டமந்திரி பதவியென்பது ஒருவேளை வெறும் மாரீசமாகி விடுமாஞல், 'தமிழ் ஈழம்' என்ற சீதையின் நிலை என்னவது என்பதே விடுதலை வேட்கை கொண்டோரின் ஒரேயொரு கேள்வியாகும்.

தமிழர்களுக்கென்று இந்நாட்டில் ஒரு பாரம்பரியத் தாயகம் கிடையாது என்பதே ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் கொள்கையாகும். இதை அவர் பிரதமராக இருந்தபோது தேசிய அரசுப்பேரவையில் மிகவும் தெளிவுபட எடுத்துக்கூறியிருக்கிருர். தமது இந்த மனப்பான்மையை அவர் மாற்றிக்கொண்டு விட்டதாகவோ, வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் தாயகம்; அப்பிரதேசங்களில் தமிழ் தேசிய இனத்தின் தனித்துவம் பாதுகாக்கப்படவேண்டும் என்ற கொள்கையை அவரது அரசு ஏற்றுக்கொண்டுவிட்டதாகவோ இதுவரை எந்த வித அறிவிப்பும் வந்ததில்லை;

வடக்கும், கிழக்கும் தமிழ் பேசும்மக்களின் மரபுவழித் தாயகம் என்பதை ஒப்புக்கொண்டு அதைப் பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தி அங்கு சிங்களவர்களை திட்டமிட்டு குடியேற்றும் காலனித்துவ இன ஒழிப்பு கொள்கையை முற்ருகக் கைவிடுவதென்று அரசாங்கம் மனப்பூர்வமாக அறிவிக்குமாஞல் —அந்த நிலையில் சிங்களக்குடியேற்ற ஆபத்து தவிர்க்கப்படலாமேதவிர—தமிழர்களுக்கு பூர்வீகத் தாயகம் என ஒன்று கிடையாது என்ற ஹிட்லரின் இனவெறிக்கொள்கையை பின்பற்றும் ஜனதிபதியா தாம் நியமிக்கும் மாவட்டமந்திரிகள் சிங்களக்குடியேற்றத்தை தடுத்து நிறுத்துவதை அனுமதிக்கப்போகிருர்? இதை நாம் சிந்திக்கவேண்டாமா?

சிங்கள அரசாங்கத்தின் இனவெறிக் கொள்கையும், மனப்பான்மையும் இதயசுத்தி

## எண்ணம்

யாக மாருதவரை—எந்தப்பதவியில் எந்தத் தமிழன் இருந்தாலும், அவன் சுயமாக இயங்குவதற்கு சிங்கள அரசு ஒருபோதும்அனுமதிக்கப்போவதில்லை!

கோணேசர் கோவிலைப் புனிதநகராக்கும் ஒரு சாதாரண விஷயத்துக்கு 'கபினெட்' மந்திரியாக விளங்கிய அமரர் திருச்செல்வம் நியமித்த ஆணைக்குழுவையே முன்பிருந்த ஐ தே. க. அரசாங்கம் அன்று ஏதேச்சாதிகாரமாக கலைத்தது என்ருல்—மாவட்டமந்திரியொருவர் சுயமாக இயங்கவா இன்று அனுமதிக்கப்போகிறது? இதையெல்லாம் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்;

1957ம் ஆண்டு உருவான பண்டா—செல்வா ஒப்பந்தம் மாநில சபைகள் மூலம் தமிழ் மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்குவதற்கு வழிவகுத்தது.

பண்டா—செல்வா ஒப்பந்தத்திலிடம் பெற்றிருந்த மாநில சபைகளுக்கும், இன்றைய உத்தேச மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்குமிடையே கூட மலைக்கும் மடுவுக்குமுள்ள வேறுபாடு மண்டிக்கிடக்கிறது.

பண்டாரநாயகா—செல்வநாயகம் ஒப்பந்தத்திலிடம் பெற்றிருந்த மாநில சபைத்திட்டம் தமிழ் ஈழத்துக்கு ஓரளவு சுயாட்சியை வழங்கியது—இன்றைய ஜே. ஆரின் மாவட்ட அபிவிருத்திசபைகளில் 'சுயாட்சி' என்பதற்கு மருந்துக்குகூட இடமில்லை.

● வடமாகாணம் முழுவதும் ஒரேமாநில சபையாக விளங்கும்— கிழக்குமாகாணம், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநில சபைகளாக பிரிக்கப்படும்.

● ஒரு மாநிலம் விரும்பிஞல் மாகாண எல்லைகளைக்கடந்து மற்ருேர் மாநிலத்துடன் ஒன்றிணைந்து ஒரே மாநில சபையாகலாம் பொதுவான பிரச்சினைகளில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்கள் ஒன்றிணைந்து பணியாற்றலாம்.

● மாநில சபைக்கு உறுப்பினர்கள் நேரடித்தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இதற்கான தொகுதிகளைப் பிரிப்பதற்கு எல்லை நிர்ணய ஆணைக்குழுக்கள் நிறுவப்படும்.

● மாநில சபைகளுக்குரிய அதிகாரங்களைப் பாராளுமன்றமே வகுத்து வழங்கும், இந்த அதிகாரங்கள் வரையறை செய்யப்பட்டு திட்டவட்டமாக சட்டத்தில் இடம்பெறும்.

● விவசாயம், கூட்டுறவு. காணி, காணி அபிவிருத்தி, குடியேற்றம், கல்வி, சுகாதாரம், கைத்தொழில், மீன்பிடி, வீடமைப்பு, சமூக சேவை, மின்சாரம், குடிநீர்த்திட்டம், வீதிகள் ஆகியவை மாநில சபைகளின் அதிகாரத்துக்குள் அமைந்திருக்கும்,

● குடியேற்றத்திட்டங்களில், குடியேற்றத்துக்கு ஆட்களைத்தெரிவு செய்யும் அதிகாரம், அந்தந்தப்பகுதி மாநில சபைகளுக்கே இருக்கும்.

● மாநிலசபைகளுக்கு மத்திய அரசுநிதி வழங்குவதுடன் வரிபோடவும், கடன்பெறவும் மாநில சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்படும்!

இவை பண்டா — செல்வா ஒப்பந்தத்தில் காணப்படும் விளக்கங்கள்; அன்று கூட்டாட்சி கேட்டிருந்த காலத்தில் இடைக்கால ஏற்பாடாக ஏற்றுக்கொள்ளப்பட்டவைகள்!

மேற்படி அதிகாரங்களை தமிழ் மாநிலங்களுக்கு வழங்குவதற்கு வழி வகுத்த ப-செ. ஒப்பந்தத்துக்கு எதிராக 'கண்டியாத்திரை' நடத்தி, அந்த ஒப்பந்தம் கிழித்தெறியப்படுவதற்கு வழிவகுத்தவர்தான் இன்றைய ஜனதிபதி யென்பதை எந்தத் தமிழன்தான் மறந்துவிடமுடியும்?

ஆஞல் இன்ருே நாம், தனிநாடு கேட்கிருேம்—எமது தாயகத்தை மீட்க உறுதி பூண்டுள்ளோம். இலங்கைஒரேநாடு அல்ல-இரண்டு வேறுபட்ட தனித்தனி நாடுகள் என்பதே நமது அரசியல் தத்துவம்,

இந்த நிலையில் கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலையில் வந்திருக்கும் மாவட்ட மந்திரி பதவியை கூட்டணி ஏற்குமாஞல்—

22மாவட்டங்களை உள்ளடக்கிய ஒரே நாடு இலங்கையென்பதையும் கூட்டணி ஏற்பதாக ஆகிவிடும். தமிழ்ஈழம் ஒருதனிநாடு அல்ல— தமிழ்பகுதிகள் ஏக இலங்கையின் ஒருபகுதியே— ஒரு சில மாவட்டமே— என்பதை ஏற்றுக்கொள்வதுபோலவும் ஆகிவிடும்.

கூட்டணியின் அடிப்படைக் கொள்கைக்கு அரசியல் தத்துவத்துக்கு—இது மாறுபாடாகிவிடாதா? ஊறுதேடாதா? தமிழ் ஈழம் தனிநாடு என்ற கொள்கையுடைய நாம், மாவட்ட அமைச்சர் பதவிகளை ஏற்ருல் என்ன ஆகும்? இலங்கை இரண்டு நாடுகள் அல்ல—22மாவட்டங்களை கொண்ட ஒரே நாடு என்பதை கூட்டணியும் அங்கீகரிப்பதுபோல ஆகாதா? இதையெல்லாம் கூட்டணி ஆதரவாளர்கள், பொதுச்சபை உறுப்பினர்கள் பா. உ.க்கள் அனைவரும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

இன விடுதலை—சுதந்திரத் தமிழ் ஈழம் என்ற ஒரே சிந்தனையைத்தவிர வேறு பலவீனங்களும் சபலங்களும் நமக்கு ஏற்படாதிருக்க தந்தை செல்வாவின் ஆன்மா வழிகாட்டும் என்று நம்புகிருேம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பகைவன் ரத்தினசாராவுக்கு

# நினைவுச் சின்னம் நிறுவியது முந்திய அரசு!

# முஸ்லிம்களை கொன்றொழித்த சிங்கள வெறியனுக்கு சிலையெடுக்கிறது இன்றைய அரசு!

## தார்மீக யூ. என். பி. ஆட்சியின் அலங்கோலம் பாரீர்!

தமிழ் மொழிக்கும், இனத்துக்கும், எதிராக கொடூர இனவெறிப் பகையைக் கக்கி தமிழுக்கு அற்ப சலுகைகள் கொடுப்பதைக்கூட எதிர்த்து 8.1.66ல் சட்டமறுப்பு ஊர்வலம் நடத்தி சூடுபட்டிறந்த ரத்தினசாரா என்ற சிங்கள பௌத்த வெறியனுக்கு அரசின் செலவில் பொதுமக்களின் வரிப் பணத்தில் நினைவுச் சின்னம் நிறுவியது சோசலிசம் பேசிய முந்திய அரசு,—

1915ம் ஆண்டு சிங்கள — முஸ்லீம் கலவரத்தின்போது முஸ்லீம்களைக் கொன்று குவித்த பேதிரிஸ் என்ற பெயர் படைத்த தீவிர சிங்கள பௌத்த வெறியனுக்கு இம்மாதம் 7ம் திகதி நினைவுச்சிலை நிறுவியுள்ளது தார்மீகம் பேசும் ஜே. ஆரின் அரசு—அதுபற்றி கூறுகிறது இக்கட்டுரை—

அறுபத்துமூன்று ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையின் வெள்ளையர் ஆட்சியின் போது 1915ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி சிங்கள முஸ்லீம் இனக் கலவரம் ஏற்பட்டது, சிங்கள இன வெறியர்கள் முஸ்லீம் மக்களை அடித்தும், வெட்டியும், சுட்டும், தீயிட்டும், கொன்று குவித்தார்கள்; அவர்களது உடமைகளை கொள்ளையடித்தார்கள். வீடுகளை தீயிட்டுக் கொழுத்தினார்கள். பெண்களை கற்பழித்தார்கள். இப்படியாக சிங்கள இனவெறித் தாண்டவம் 1915 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21ந் திகதி உச்சக் கட்டத்தை அடைந்தது.

அப்போது நடைமுறையிலிருந்த இலங்கையின் சிவில் நிர்வாகம் இலங்கை ராணுவத் தளபதியான பிறகேடியர் ஜெனரல் மெக்லம் (ஆங்கிலேயர்) என்பவரிடம் ஒப்படைக்கப் பட்டது, இராணுவத் தளபதி மெக்லம் உடனே இலங்கையின் வடமாகாணத்தை தவிர்த்து மற்றையஎல்லாஇடங்களிலும் "மார்சல் லோ" வை பிறப்பித்தார். பாரதத்திலிருந்து இராணுவம் வரவழைக்கப் பட்டது. அப்போதய பொலிஸ் மா அதிபராக இருந்த ஹர்பட்டங்பிகின் (ஆங்கிலேயர்) சிங்கள இன வெறியர்களை விசாரணையின்றி சுட்டுத் தள்ளுமாறு உத்தரவு விட்டார். பாரதத்திலிருந்து வருவிக்கப்பட்ட இராணுவத்திலிருந்து பஞ்சாப் மராட்டிய இராணுவ வீரர்கள் சிங்கள இன வெறியர்களை கண்ட கண்ட இடங்களில் சுட்டுத் தள்ளினார்கள். சுடப்பட்ட இனவெறியர்களின் தொகை ஆயிரக் கணக்காகும். அதை விட கூடுதலானது இறந்த முஸ்லீம் மக்கள் தொகையாகும்.

மாராட்டிய பஞ்சாப் இராணுவ வீரர்கள் சிங்கள இன வெறியர்களால் நிர்வாணமாக்கப்பட்ட முஸ்லீம் பெண்களுக்கு அணிந்து கொள்வதற்கு தமது தலையில் கட்டியிருந்த தலைப்பாகையை அவிட்டுக் கொடுத்தார்கள் மேலும் தமக்கு வழங்கப் படுகின்ற உணவுகளையும் பசியால் வாடிய முஸ்லீம் மக்களுக்கு கொடுத்து உதவி புரிந்தார்கள். அவர்கள் பெருந்தன்மை அளவிடப்போமோ,

இக்கலவரத்திற்கு காரணமாக சிங்களத் தலைவர்களான எவ்.எஸ். சேனநாயக்கா, டி.பி. ஜயதிலக, எட்மண்ட் ஹேவா விதாரண, பியதாச, சிரிசேன, ஜோன்த சில்வா முதலானோர்களை கைது செய்து விசாரணையின் பொருட்டு சிறையிலடைக்கப் பட்டார்கள்.

சிங்கள இன வெறியின் கோரத்தாண்டவத்தின் போது இனவெறியர்களுக்கு தலைமை வகித்து முஸ்லீம் மக்களை குழந்தைகள் பெண்கள் ஆண்கள் உட்பட எல்லோரையும் சுட்டுத் தள்ளியவன் தான் ஹென்றி பேதறிஸ் என்னும் சிங்கள இன வெறியனுவான். அவனுக்கு வயது 27 இவனை அப்போதைய இராணுவத் தளபதி மெஸ்கம் என்பவர் முச்சந்தியில் நிறுத்தி சுட்டுத் தள்ளுமாறு உத்தரவு விட்டார். இவன் சுடப்பட்ட தினம் 1915 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7ந் திகதி யாகும்.

பயங்கரமான இந்த சிங்கள இனவெறியனை நினைவுகூருமுகமாகவும் கௌரவிக்குமுகமாகவும் அவனது உருவச் சிலையை முதன் முதலாக இலங்கையின் கொழும்பு ஹவ்லொக் முன்னால் நிறுவி அவனை கௌரவிக்கின்றது தார்மீக அரசாங்கம். அவன் சுடப்பட்டு இறந்த தினமாகஇம்மாதம் 7ந் திகதி அவனது சிலையை இலங்கையின் தார்மீக சமுதாயத்தின் தலைவர் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனா திறந்து வைத்தார். பிரதமர் பிரேமதாச மலர் மாலை போட்டு அஞ்சலி செலுத்தினார். இச் சிலையை தர்மசேனா நிர்மாணித்துள்ளார்.

இன வெறியன் பேதறிஸை கௌரவிக்கும் பொருட்டு சிங்கள தினசரிப் பத்திரிகைகள் எல்லாம் ஒரு கிழமையாக கட்டுரைகள் வெளியிட்டு அவனை கௌரவித்தன.

(கலைமதி)

---

—1-ம் பக்கத் தொடர்

வழக்குஎதிர்வரும்திங்கட்கிழமை(17-7-78) முடிவடையும். கலாபதியின் பிரதான சட்டத்தரணியாக திரு. மு. சிவசிதம்பரம் ஆஜராகி வழக்கை நடத்துகிறார்.

தாம் விடுதலையானது குறித்து அபிப்பிராயம் தெரிவித்த இளைஞர்கள், நீதியும் நியாயமும் ஒருநாள் வெற்றி பெற்றே தீரும் என்பதை தமது விடுதலை எடுத்துக் காட்டுவதாக குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வழக்கில் முதல் எதிரியின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி திரு. எம் சிவசிதம்பரத்துடன் சட்டத்தரணிகளான திரு,எம்.அண்டர்லூட், திரு. எஸ். ருத்திரமூர்த்தி, திரு. கே. துரைரத்தினம். திரு. எஸ். கனகமனோகரன் ஆகியோர் ஆஜராகினர்.

2ம் எதிரியின் சார்பில் சட்டத்தரணி திரு. ஜே. ஏ. செருபிமுடன், சட்டத்தரணிகளான திரு. வி. எஸ். ஏ. புள்ளநாயகம், திரு. என். விஜயநாதன், திரு. எம்.என். ராஜா, திருமதி சாந்தினி ஞானகரன், திரு கனக மனோகரன் ஆகியோர் ஆஜராகினர்,

3ம்எதிரியின் சார்பில் திரு ஏ மகேந்திரராஜாவுடன், சட்டத்தரணிகளான திரு வி என் நவரத்தினம், திரு எஸ் மகேந்திரன். திரு எஸ் வரதராஜா, திரு கனக மனோகரன் ஆகியோர் ஆஜராகினர்.

4ம்எதிரியின் சார்பில் சட்டத்தரணி திரு வி என் நவரத்தினத்துடன் சட்டத்தரணிகளான திரு.எஸ்.வரதராஜா, திரு. எஸ். நவரத்தினம் (கரிகாலன்) ஆகியோர் ஆஜராகினர்.

5ம் எதிரியின் சார்பில் சட்டத்தரணி திரு எஸ் சிற்றம்பலத்துடன் சட்டத்தரணிகளான டாக்டர் நீலன் திருச்செல்வம் திரு எஸ் ஸி சந்திரகாசன் ஆகியோர் ஆஜராகினர்.

ஐந்து எதிரிகளின் சார்பிலும் சட்டத்தரணி திரு எஸ். சுமந்திரன் ஆஜராகினார்.

---

## உகந்தை ஆலயம் உயர் சாதியினர் உடமையா?

இலங்கையிற் குறிப்பாக கிழக்குமாகாணத்திற் பிரசித்தி பெற்ற ஆலயங்களுள் உகந்தை முருகன் ஆலயம் குறிப்பிடத்தக்க தொன்றாகும். இன்றுவரை எல்லோராலும் வழிபடப் பட்ட இவ்ஆலயத்தில் இன்று நிர்வாகத்தினர் என்று கூறப்படும் சிலர் கெடுபிடி செய்துவருகின்றார்களாம், பொதுமக்கள் வழிபாட்டிற்கான ஆலயத்தை நிர்வகிப்போர் தாம் உயர்சாதியார் எனும் ஆணவத்தினால் சிலரைத் தாழ்ந்தவர்கள் என்று கூறிப்புறக்கணிக்கின்றார்கள் என அறிகின்றோம்.

சாதித்துவேஷத்தைச் சட்டப்படியும், சம்பிரதாயப் படியும் விலக்கிவிடவேண்டும் என்று படித்தோர்முதல் பாமரர்வரை போராடி வரும் இக்காலத்தில், உகந்தை முருகன் ஆலயத்தில் அதுவும். இதுநாள்வரை கோவிலிற் தொண்டுகள் செய்தும், விழாக்கள் நடாத்தியும் வந்த சலவைத்தொழிலாளர்களையே புறக்கணித்து ஒதுக்கிவெளியே நிற்கும்படி கோவில் நிர்வாகம் தீர்மானம் கொண்டுவந்திருப்பது கண்டித்து வாபஸ்பெறப்பட வேண்டியதும், உடனடியாகத் தவிர்க்கப்படவேண்டியதுமாகும்.

நிர்வாகம் இதுவிடயத்தில் பாராமுகமாக ஏனோதானோ என்றுதம் கெடுபிடிகளை விட்டுவிடாதிருப்பின் கிழக்கிலங்கைச் சலவைத் தொழிலாளர் சங்கம், உரிமையற்ற ஒரு சமயத்திலிருந்து விலகி, சமத்துவமிக்க ஒரு சமயக்கோட்பாட்டைப் பின்பற்றி வருவதோடு உகந்தை ஆலயபரிபாலன சபைத்தீர்மானங்களில் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தம்து சேவையை (சலவைத் தொழிலை) செய்யாமல் வேலை நிறுத்தம் செய்வார்கள் எனவும் அறிகின்றோம்.

எனவே காலத்திற்கு ஒவ்வாத, இன ஒற்றுமைக்குப் பங்கமான உலகம் பழிக்கும் இழிந்தமூடக்கொள்கைகளை இனிமேலாவது ஒதுக்கிவிட்டுக்காலத்திற்கும், நாட்டின் நலத்திற்கும் ஏற்பப் பொது ஸ்தாபனங்களையும், மதஸ்தாபனங்களையும் நடாத்துவோர் நன்நோக்குடன் நடாத்தின் யாவும் நல்வளம் காணும், இதனை மனத்திருத்தி உகந்தை முருகன் ஆலய நிர்வாகமும் ஆலய வழிபாட்டில் எல்லோரையும் சமமாக மதித்து நடாத்த வேண்டும். புறத்தூய்மையிலும் அகத்தூய்மையே தெய்வபக்திக்கு அவசியமானது. இந்த அகத்தூய்மையை மக்களிடையே வளர்த்து பாகுபாடற்ற அன்புச் சமுதாயமாக எல்லோரையும் வாழவைக்கச் சமய ஸ்தாபனங்களே முன்நிற்பனவாகும். இந்தஸ்தாபனத்தை நிர்வகிப்போர் மக்களிடையே பாகுபாடு காட்டுவார்களாயின், நிர்வாகமே தூய்மையற்றதாகிவிடும். எனவே உகந்தைமுருகன் மக்கள் எல்லோருக்கும் நல்லருள் புரிவாராக;

—க. சச்சிதானந்தன்
தலைமைச் செயலாளர்,
இலங்கை இந்து இளைஞர் பேரவை.

---

## வாராந்தக் கருத்தரங்கு

இடம்: த.வி.கூ. தலைமைச் செயலகம், யாழ்ப்பாணம்.

காலம்:- 15-7-78 சனிக்கிழமை மாலை 6.30மணி.

தலைவர்:- திரு. வெ யோகேஸ்வரன் பா. உ.

தலைப்பு: ''வீர சுதந்திரம் வேண்டி நின்றோர் வேறொன்று கொள்வாரோ?''

உரை: வண. எஸ். சர்வானந்தா அடிகளார்.

---

**மட்டக்களப்பில்**

சுதந்திரன்
விநியோகஸ்தர்கள்

[illegible]
11, 13, மத்திய வீதி,
மட்டக்களப்பு

**மில்க்வைற் மெடிக்கேற்றட் சோப்**

ஆரோக்கிய வாழ்விற்கு மில்க்வைவற் மெடிக்கேற்றட் சோப் வாங்கி உபயோகியுங்கள். பெரிய கட்டியாகவும் சிறியகட்டியாகவும் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது.

2 மேலுறைகளை அனுப்பி மில்க்வைற் செய்தியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க்வைற்—யாழ்ப்பாணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழீழப்போராட்டத்தில் நான் முன்னிற்பேன்" -இராசு



மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில் 8.7.78 சனிக்கிழமை தமிழர் விடுதலைக்கூட்டணிசெயலதிபர்திரு. அ. அமிர்தலிங்கம் பா.உ, திருகோணமலை பா.உ. திரு. இரா சம்பந்தர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில், நீண்ட காலத்துக்குப் பின் மட்டக்களப்பு தமிழர் விடுதலைக் கூட்டணி தொகுதிக்கிளை நிறுவப்பட்டது. இக் கிளையின் தலைவராக மட்டக்களப்பு முதல்வர் திரு. செ. இராசதுரை அவர்களும், செயலாளராக கவிஞர் காசி ஆனந்தனும், துணைத்தலைவராக சட்டத்தரணி திரு. சாம்தம்பி முத்துவும், துணைச் செயலாளராக திரு. ஜோசெப் அவர்களும், பொருளாளராக இரா அம்பலவாணர் அவர்களும், தெரிவு செய்யப்பட்டனர். மட்டக்களப்பு தொகுதியின் சார்பில் கூட்டணியின் பொதுச் சபையில், தலைவர், செயலாளர், பொருளாளர். த.இ.பேரவை மட்டக்களப்பு தொகுதி கிளைத் தலைவர் பொன் வேனுதாஸ் ஆகியோர் அங்கம் வகிப்பார்கள்.

மேற்படி அமைப்புக் கூட்டத்துக்கு தலைமை தாங்கி உரை நிகழ்த்திய தமிழர் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பா.உ. கூறியதாவது:-

"மட்டக்களப்பின் இலட்சிய தாகத்தை நான் என்றும் மறந்தது கிடையாது. போராட்டம் என்றால் பொங்கி உணர்ச்சிப் பிழம்புகளாய் வெடித்துக் கிளம்பும்

தமிழன் இன்று பலவழிகளிலும் நசுக்கப்பட்டு அடிமையாக்கப்பட்டு வருகிறான். சொந்தத் தாயகம் பறிபோகும் பொல்லாங்கு ஒருபுறம், தமிழ் மொழிமெல்லமெல்ல அழிக்கப்படும் படு இனவெறி மறுபுறம்; இப்படித் தமிழன் இலங்கையில் சர்வாதிகாரச் சிங்கள அடிமைத் தனத்துக்குள் சிக்கித் தவிக்கிறான். சகலவற்றிலும் விடுதலை பறிபட்ட இனமாக

துலங்கும் வீரத்திருமலை, இன்று திட்டமிட்ட சிங்கள ஆக்கிரமிப்பால் காலகெதியில் பறிபோகும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுக்கிடக்கிறது. இந்தத்துயர் இன்னும் நீண்டு போனால் தமிழன் பூண்டோடு அழியத்தான் வேண்டிவரும்;

அம்பாறை மாவட்டம் பறிபோய் விட்டது. தனித் தமிழ் தொகுதியான பட்

மரவட்ட அமைச்சர் என்ற தூண்டிலைப் போட்டு விடுதலைப் போராட்ட மீன்களைப் பிடிக்கப் பார்க்கிறார்கள்- எனது உயிர் போனாலும் இந்த ஈனத்தனத்துக்கு தலை பணிய மாட்டேன்,

மும்மொழித்திட்டம் என்ற போர்வையில் தமிழ் இனத்தை அழிக்கப் பார்க்கிறார்கள். இந்தத் தந்திரப் பொறிகளுக்கு தமிழர் விடுதலைக்கூட்டணி தடைக் கல்லாக நிற்கிறது.

சுதந்திரமாகத் தமிழன் புகைவண்டியில் கூடப் பிரயாணம் செய்ய முடியாத அடிமைத்தனம் வந்து விட்டது. இருந்தால் துப்பாக்கி வெடி, கதைத்தால் கிறிஸ் குத்து என்ற நிலைமை தமிழனுக்கு வந்து விட்டது. சன்சோனிக்கமிஷன் நமக்குக் காட்டும் பாடம் என்ன? கற்பழிப்பு, பயங்கரக்கொலை, நினைக்க முடியாத கள்ளச்

காழ்ப்புணர்ச்சியைத் தூக்கியெறிந்து ஒற்றுமையாக விடுதலை வெற்றிக்குப்போராடுவோம்.

கற்பனைப் புலிகளைக்காட்டி விடுதலை இயக்கங்களைக்கூட தடை செய்யப்பார்க்கிறார்கள்.' நாம் இனிமேல்தான் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நமது உணர்ச்சிக்கு வேலை வந்து விட்டது. நமது உரிமைகள் பறிபோகலாம். ஏன் நமது பொன்னான உயிர்களைக்கூட இழக்கலாம். உரிமைப்போராட்டம் என்று வந்து விட்டால் இவைகள் எல்லாம் சாதாரண சம்பவங்கள்!

மீண்டும் மீண்டும் அறுதியிட்டுக் கூறுகிறேன் நமக்குள் ஒற்றுமை வேண்டும். எதையும் தாங்கும் உறுதியான இதயம் வேண்டும். தூயபுனிதம் அரசியலுக்குள் வந்து சேர வேண்டும்"

இவ்வாறு கூறி இரு அணியினரையும் தனது அறிவால் அன்பு எனும் அங்குசத்தால்

# 'நாங்கள் என்றும் தலைமைப்பீடத்துக்கு கட்டுப்பட்டவர்கள்' -காசி



தீப்பந்தங்களை நான்மட்டக்களப்பில் நிறையக் கண்டிருக்கிறேன். அன்றும் இன்றும் விடுதலை வரலாற்றின் காவியத் தலைவர்களாக மட்டக்களப்பு இளைஞர்கள் போராட்டம் நடத்தி வருவதைஎந்தத் தமிழன் தான் மறந்து வாழ முடியும்,

இந்தக் கூட்டத்தில் பழைய முகங்கள் பலவற்றைக் காணுகிறேன். கொள்கைப் பற்று நிறைந்த இலட்சிய வீரர்களாம் இளைஞர்களையும் காணுகிறேன் என் நெஞ்சம் உணர்ச்சிப் புல்லரிப்பால் பொங்கி வழிகிறது. இளைஞர்கள் என்றும் துடிப்புள்ளவர்கள், எதற்கும் அஞ்சாத புலிகள். நான் இளைஞர்களின் தூய, புனிதமான, களங்கப்படாத விடுதலை ஆர்வத்துக்கு என்றும் தலைவணங்குபவன். கொள்கைத் தங்கங்களாம் இளைஞர்களாகிய உங்களுக்கு ஒரு வேண்டுகோள் விட ஆசைப்படுகிறேன். தயவு செய்து நீங்கள் இயக்கத்துக்குள் பிரிவினையை உண்டாக்காமல் ஒற்றுமையோடு விடுதலைக் கோட்டையைக் கட்டி எழுப்ப வேண்டுகிறேன்: நம்மவர் மத்தியிலுள்ள கடந்த காலக் கசப்புகளை மறந்து, விடுதலை வெற்றிக்கு பாதை சமைக்குமாறு உரிமையுடன், அதே நேரத்தில் தணியாத அன்பால் வேண்டுகிறேன்.

எதற்கும் அஞ்சி ஒடுங்கி வாழ வேண்டிய இனமாக தமிழன் இன்று இலங்கையில் உலவ வேண்டிய நிலையில் இருக்கிறது.

சரித்திர காலம்முதல் தனிநாடாக இயங்கிய தமிழ் ஈழம் இன்று சிங்கள வேட்டைக்காடாக மாறிவிட்டது. கிழக்கு மாகாணத்தைநினைத்துப் பார்க்கும் பொழுது நமது நெஞ்சமே வெடிக்கும் போல் இருக்கிறது. மறைந்தும் மறையாத மாமணி நமது தந்தை செல்வா அவர்கள் கிழக்கு மாகாணத்தில் தனிப்பற்றும், பிரிக்க முடியாத அன்பும் பாசமும் கொண்டிருந்தார். கிழக்கு மாகாணம் சிங்கள ஆதிக்கத்தால் மெல்ல மெல்ல கபளீகரம் செய்யப்படுவதைக் கண்டு நெஞ்சம் நொந்து குமுறிக் கிடந்தவர் தந்தை செல்வா. பழம் பெரும் தமிழ் நிலங்களான மூதூர், திருமலை, தம்பலகாமம், கிளிவெட்டி போன்றபகுதிகளில் எக்கசக்கமான சிங்களக் குடியேற்றம் ஏற்பட்டு தமிழர் நிலம் சூறையாடப் பட்டு விட்டது. சேருவாவில என்ற சிங்களத் தொகுதியே இன்று உருவாக்கப்பட்டு விட்டது. சிங்கள இனவெறிப் படை எடுப்பால் இன்று பழந்தமிழர்வாழும் மூதூர்ப் பகுதி 'வியட்னாம் பூமியாக" மாறிக்கிடக்கிறது. தன் சொந்த மண்ணிலே தமிழன் நிம்மதியாக வாழ முடியாத பயங்கரம் அங்கே தலைவிரித்தாடுகிறது,

தேவாரப் புகழ் பெற்ற பழம்பெரும் தமிழ் பெரும் தமிழ் நாடான இயற்கைத் துறைமுகம் பொலிவோடு

டிருப்பிலும் சிங்கள வாக்காளர் எண்ணிக்கைக் கூடிக் கொண்டிருக்கிறது. பொத்துவில் மண்ணிலும் சிங்களக் குடியேற்றச்சூறுவளி புகுந்து விட்டது. தமிழ் ஈழ எல்லை உகந்தையிலும், தமிழ்க் கடவுள் முருகனுக்குத் தொல்லை வந்து விட்டது. வவுனியா, மன்னார், முல்லைத் தீவு எங்கும்சிங்களக்குடியேற்றம். இந்த நில அழிப்பு இனவெறி தொடர்ந்து நடந்த வண்ணமே இருக்கிறது. இப்படியான பயங்கரமான கால கட்டத்தின் மத்தியில் தான் தமிழன் விடுதலைக்காகப் போராடுகிறான்,

ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் இனிப்புக்கொடுத்து நம்மை ஏமாற்றப்பார்க்கிறது. இந்தப் பாசாங்குத் தனமான நடிப்புக்குத் தமிழர் கூட்டணி ஒரு போதும் பலியாகாது. புதிய அரசியல் அமைப்புத் திட்டம் கொண்டு வந்து தமிழர்களின் உரிமையைத் தரப் போகிறார்களாம். புதிய மொந்தையில் பழையகள்ளு தான் வரப்போகிற அரசியல் திட்டம், இந்தஏமாற்று வித்தையைக்கண்டு தமிழன் ஏமாறக்கூடாது. சில சலுகையைத் தந்து தமிழர் விடுதலைப் போராட்டத்தை தடுத்து விடலாம் என்று ஆட்சியாளர்கள் கனவு காணுகிறார்கள்.

சூறையாடல் தமிழன் இன்னும் இணைந்து வாழ முடியுமா?

முடிந்த முடிவு பிரிவினை தான் வேறு கதைக்கே இடமில்லை. பயங்கரத்தின் மத்தியில் ஒற்றுமையாக வாழ முடியுமா? நமது அப்பாவித் தமிழ் இளைஞர்கள் இன்று அநியாயமாக சித்திரவதைப் படுகிறார்கள். வேண்டும் என்று திட்டம் போட்டு சிறைச்சாலைக்கு அனுப்பப் படுகிறார்கள். அடி, ஆக்கினை பேசமுடியாத மௌனத் திரை இது தான் இன்று தமிழ் இளைஞனுக்குக்கிடைக்கக்கூடிய பரிசு. தார்மீக ஆட்சியில் எத்தனை கொடுமைகளைக்கண்டு விட்டோம். பாராளுமன்றத்தில் தமிழர்களின் உரிமையைப் பற்றிப் பேச எழும்பினால்'தார்மீகம்' அங்கே காட்டுக் கூச்சல் போட்டு உண்மைக்குத்திரை போடப்பார்க்கிறது.

என்னதான் கூறினாலும் சிங்கள அரசாங்கம் தங்கப் பாளத்தில் வைத்து தமிழ் ஈழத்தைத்தரப்போவதில்லை நமது உரிமையைப் பெற நாம் நீண்ட போராட்டம் நடத்தத்தான் வேண்டி இருக்கிறது. சோம்பி மூலையில் முடங்கிக்கிடக்காமல் சரியான திட்டம் போட்டு நமது இழந்த உரிமைகளைப் பெறசங்கற்பம் பூணுவோம். நம்மத்தியிலுள்ள பிரிவினைக்

கட்டி விட்டார் அண்ணன் அமிர் அவர்கள்.

செ. இராசதுரை பா. உ. பேசுகையில் "நான் என்றும் தமிழ் இனத்தைக் காட்டிக் கொடுக்க மாட்டேன். என் மூச்சு, பேச்சு, செயல் அத்தனையும் தமிழ் ஈழப்போராட்டத்துக்காகவே அர்பணிப்பேன். இளைஞர்களின் விடுதலை ஆர்வத்துக்கு என்றும் நான் முட்டுக்கட்டையாக நிற்கமாட்டேன்; நான் இன்று நேற்றல்ல ஏறக் குறைய இருபத்தைந்து ஆண்டுகளாக தந்தை செல்வாவின் தூய அரசியல் பாதையைப் பின்பற்றிவருபவன். நான் மீண்டும் சத்திய வாக்கு தருகிறேன், இந்த இராசதுரை தமிழ் ஈழப் போராட்டத்துக்கு முன்நிற்பான்; இதுசத்தியம்"

—8-ம் பக்கம் பார்க்க



## இருவரையும் இணைத்து வைத்து அமிர் ஆற்றிய உணர்ச்சியுரை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஹிம்சை மட்டும்தானா? காந்தீய நெறி? சுதேசி பொருட்களை ஆதரிப்பதும் காந்தீயம்தான்!

## காந்தீய வழியிற் செல்லும் கூட்டணி இதற்கோர் இயக்கம் தொடங்குமா?

அளவை— குமாரன்

சுதந்திரம் பெற்ற பின் தமிழ்ஈழம்அந்நியநாடுகளில் தங்கியிருக்குமா? சிலர் கேட்கும் கேள்வி இது. இக் கேள்விக்குப் பல முறை விரிவான பதில் கொடுக்கப் பட்டுள்ளது. தமிழ் ஈழம்எவ்வாறு அமைக்கப்போகிறோம் இது ஒரு முக்கியமான கேள்வி. அகிம்சை அடிப்படையிலா? அல்லது ஆயுதம் ஏந்தியா? இவ்வாறெல்லாம் மூலைக்கு மூலை வினவிடுத்து விமர்சிக்கிறார்கள்.

அகிம்சை தான் வழி என்றும்— காந்தீய பாதை தான் மார்க்கமென்றும் கூட்டணி கூறுகிறது. காந்தியின் வழி ஆயுதம் ஏந்தாது விடுவது மட்டும் தானா? இந்திய விடுதலைப் போரில் சத்தியாக்கிரகம் மட்டும் தான் விடுதலையைத் தேடித்தந்தா? சுபாஸ் போன்ற விடுதலை வீரர்களின் உறுதியான தலைமையும்— அண்ணல் காந்தியின் கிராமிய பொருளாதார புரட்சி நடவடிக்கைகளும் காரணம் இல்லையா?

சுதந்திரம் பெற்ற பின்னர் தான்— அதிகாரம் பெற்ற பின்னர் தான் பொருளாதார, சமூகப் புரட்சி என்று அண்ணல் காந்தி தட்டிக்கழிக்கவில்லை. காந்தி வழி நம் வழி எனக் கூறும் கூட்டணி இதை மறக்கக்கூடாது. இந்தியா சுயராச்சியம் கிடைக்க முன்னரே— சமூக, பொருளாதார மாற்றத்திற்கு வித்து ஊன்றப்பட்டது. அகிம்சா மூர்த்தி கிராமம் கிராமமாகச் சென்று கிராமிய மக்கள் மத்தியில் கிராமியபொருளாதாரத்திட்டத்தைப் பிரசாரம் செய்தார். தீண்டாமை ஒழிப்பில் மும்முரமாக ஈடுபட்டார் உள்ளூர் உடு புடவைகள் உற்பத்திப் பொருட்கள் பாவனைக்கு வருவதற்குரிய ஒழுங்குகளை தீவிரப்படுத்தினார். ஒவ்வொரு கிராமமும் தத்தமது பொருளாதாரத்திலேயே தங்கத் தக்கதாக இருக்க வேண்டுமெனக்கருதி செயலில் இறங்கினார்.

அந்நியனுடைய வியாபாரப் பொருட்கள் படிப்படியாக இந்தியாவில் இருந்து மறைந்தன, வியாபாரத்திற்கு வந்த வெள்ளையன் பாரத மக்களை ஆள முடியாமல் மூட்டை கட்டினான். பாரதம் சுதந்திரம் பெற்றது;

சுதந்திர தமிழ் ஈழம் அமைக்க வேண்டும் எனத் தமிழர் விடுதலைக் கூட்டணியும், தமிழ் இளைஞர் பேரவையும் மனதார விரும்பினால் காந்தி காட்டிய சகல வழிகளையும் நாம் பின் பற்றுவதை ஆராய வேண்டும். தமிழ் ஈழம் வெறும்தேர்தல் குண்டாகக் கருதி— பேரம் பேசுவதற்குரிய தந்திரமாகக் கருதினால் நாம் இவற்றைச் செய்ய வேண்டியதில்லை.

எனவேதான் தமிழ் ஈழம் —தமது உயிர் மூச்சாகக் கொண்டுள்ள தமிழர் கூட்டணியும் இளைஞர் பேரவையும்— அரசுக்கு அவகாசம் கொடுத்திருக்கும் இந்த நேரத்தை— பொன்னான காலத்தை— வீணாக விரையம் செய்யாது பயன்படுத்த வேண்டும். போருக்கு முன் அமைதி என்பார்களே! அவ்வாறான அமைதியான ஆயத்தங்கள் நடைபெற வேண்டும்.

எனவே,

கிராமிய பொருளாதாரத் திட்டத்தின் முன்னோடியாக— இன்று வீழ்ந்து கொண்டிருக்கும் கைத்தறி நெசவுத் தொழிலுக்கு கை கொடுக்கவேண்டும். பருத்தி நூலுக்கு அரசால் ஒதுக்கப்படும் மாநியம் நிறுத்தப்பட்டதால் நூலின் விலை இரட்டிப்பாய் விட்டது. இதனால் பலர் வேலை இழக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. அந்நிய உடு புடவைகள் ஊடுருவி முன்னேறுகின்றன.

முன்பு பருத்தியை ஏற்றுமதி செய்து, பருத்தித்துறை. பருத்தித்தீவு, பருத்திவேலி, என ஊர்ப் பெயர்களைக் கொண்ட தமிழ் ஈழம் வெளிநாடுகளில் கையேந்தும் வெட்கம் கெட்ட நிலையில் நிற்கின்றது.

இந் நிலையை முழுமையாக மாற்றினால் தான் தமிழ் ஈழம் சுதந்திரம் பெறுவதற்கு முதல் கதவைத்திறக்க முடியும். மக்கள் ஆதரவுள்ள இயக்கம் தான் இதை மாற்றி அமைக்க முடியும்.

அண்ணன் அனுப்புகிறான், தம்பி, மாமா, மச்சான் அனுப்புகின்றார்கள் என நாம் உடுக்கின்றோம். இந் நிலையை மாற்றி உள்ளூர் உற்பத்தி நிலையங்கள் இயங்குவதற்குப் பணம் அனுப்பும்படி அவர்களிடம் பிரசாரம் செய்ய வேண்டும். இதை வெளிநாடு செல்லும் தமிழ் தலைவர்கள் அவர்கள் மத்தியில் புரியும்படி பிரசாரம் செய்ய வேண்டும். அப்படியானால் நாம் உற்பத்தி செய்து அவர்களுக்கு அனுப்பும் காலம் வளர்ச்சியுற்று விரைவில் வரும்.

இதற்கு முன்னோடியாக,

எதிர்வரும்கூட்டணிமாநாட்டிற்கு அனைவரும் கைத்தறி, உள்ளூர் உற்பத்தி உடு புடவைகளையே உடுக்க வேண்டுமெனக் கூட்டணி கட்டளை இட வேண்டும்.

அத்துடன்,

படிப்படியாக கைத்தறி உள்ளூர் புடவைகளை மக்கள் மத்தியில் பாவனைக்குக் கொண்டு வரும் நோக்கோடு தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்குள்ள இயக்கமான தமிழர் விடுதலைக் கூட்டணி 'கைத்தறி உடைகள் விற்பனை வாரம்' ஒன்றை நடத்த வேண்டும்.

எதிர்வரும் தமிழினத்தின் தலைவன் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களுடைய பிறந்ததினத்தன்று தொடக்கம் ஒரு வாரம் இவ் விற்பனை வாரத்தைக் கூட்டணி செய்யலாம்.

விற்பனையைச் சாத்தியமாக்கக் கூடிய முறையில்ஒரு ரூபா பெறுமதியுள்ள கைத்தறிக் கைக்குட்டைகளையும், ஏனைய சால்வை, வேட்டிகளையும், சேலைகளையும் விற்பனை செய்ய முடியும்.

முன்பு தி.மு.க, தலைவர்கள் வீடு வீடாக விற்பனை செய்து நெசவுத் தொழிலாளரை வாழ்வித்ததை த.வி.கூ. தலைமைப்பீடம் சிந்தித்து முடிவு செய்யட்டும்!

## பழையபடி எடுத்துவா வேல்!

வானோங்கு ஏழுமலை வளமார் கதிர்காமம்
மாணிக்க கங்கைக் கரையில்
தேனோங்கு மாவிளக்குத் திருப் பதியில்
தேடி வரும் பக்தர்கி கெல்லாம்
மானோங்கு வள்ளி தெய் வானையுடன்
மயூரா நின் காட்சி போதும்!
கூன் நீங்கத் தமிழர் குலம் உயிர் காக்க
கூப்பிட்டோம் ஓடிவா முருகா!

சுடர் வேல் எடுத்தனை, கூர்வேல் எடுத்தனை
சூரனை மடித்தனை ஏன்?
அடர் கான் எரிதல் போல் அரக்கரை முடித்தனை
அடியோ டறுத்தனை ஏன்?
இடர் மேல் இடர் விழ இன்தமி ழுயிரினை
எடுத்திடல் அரக்க மிலையோ?
படர் மேல் வேதனை பாரடா முருகா!
பழையபடி எடுத்துவா வேல்!

—சரவணையூர் வே. இராசலிங்கம்

—2-ம் பக்கத் தொடர்

கூடாது. அதற்குக் காரணமுண்டு. அதாவது நாம் பயன்படுத்துகின்ற சில பொருட்கள் வெளி நாட்டிலேயிருந்து வந்த பொருட்கள். அந்தப் பொருட்களை நாம் இங்கு பயன்படுத்துகிறோம் என்று சொன்னால், நம்முடைய உணர்வுக்கும், நம்முடைய அறிவுக்கும் பொருத்தமான நிலையிலே அந்தப் பொருளை நாம் பெயர் வைத்து அழைக்க வேண்டும்.

உருளைக்கிழங்கு ஆஸ்திரேலியாவிலிருந்து வந்தது. ஆனால் அங்கு அதற்கு வேறு பெயரிட்டிருந்தார்கள். இங்கு வருகின்றபோது நம் தமிழர்கள், அதாவதுபொது மக்களாகிய தமிழர்கள், அறிஞர்கள் அல்லர்; பொது மக்கள் அதைப் பார்த்தவுடனே உணர்ந்துகொள்ள வேண்டும் என்பதற்காக POTATO என்கின்ற அந்தப் பெயரை அவர்கள் வாயிலே சரியாக நுழைத்துக்கொள்ளாமல் அவர்களுடைய உணர்வுக்கும், அறிவுக்கும் பொருத்தமாக, மற்றக் கிழங்குகள் எல்லாம் நீளமாக இருக்கின்றன. இது மட்டும் உருண்டையாக இருக்கிறது என்பதனாலே உருளைக்கிழங்கு என்று சொன்னார்கள்.

அதேபோல் அரேபியாப் பகுதிகளிலிருந்து வந்த அந்த விலங்குக்கு இவர்கள் ஒரு புதிய பெயரைச் சூட்டினார்கள். அது குதித்துக் குதித்துப் போவதால் குதிரை என்று சொன்னார்கள். பழந்தமிழர்கள் வேறு நாடுகளிலிருந்து பொருட்கள் வந்தாலுங்கூட அந்தப் பொருட்களுக்குத் தங்களுடைய உணர்வுப்படி. அறிவுப்படி தோற்றத்தாலோ, சுவையாலோ என்ன, பெயர் வைக்கலாம் என்கின்ற ஒரு உணர்வோடு ஒரு பொதுப் பெயரைச் சூட்டி வழங்கினார்கள். அதேபோல் இங்கிலாந்திலே கண்டுபிடிக்கப் பட்ட தொடர் வண்டி இங்கே வந்தது; அதைப் பார்த்தவுடன் இவர்கள், அவன் சொன்ன அந்த எளிய சொல்லை, TRAIN என்கிற சொல்லைக்கூடச்சொல்ல விரும்பாமல், இது மற்ற வண்டிகளைப்போல் இல்லாமல் புகைவிட்டுக்கொண்டு போகிறது. எனவே இது புகைவண்டி என்று சொன்னான். அதன் பின் சில வண்டிகள் புகைவிடாமல் போவதைப்பார்த்து ஓ! புகைவிடாமலுங்கூட போகும்போல் இருக்கிறது. எனவே அது தொடர்வண்டி என்று நேர் மொழி பெயர்ப்பாகப் பொதுமக்களே பெயர் சூட்டினார்கள், எந்தப் புலவரோ, எந்த அறிஞரோ நீங்கள் இப்படித்தான் சொல்ல வேண்டும், அழைக்கவேண்டுமென்று அந்தப் பொதுமக்களைக் கேட்டுக்கொள்ளவில்லை,

அதேபோல் கோழி ஒன்று வந்தது. பாலைவனத்திலிருந்து; அரேபியாப் பாலைவனத்திலிருந்து, அந்தக் கோழியைப் பார்த்தான் இவன். தங்கள் வீட்டிலே வளருகின்ற கோழியைப் போல் இருந்தாலுங்கூட அது கொஞ்சம் உயர்ந்து இருப்பதனாலே 'வான்கோழி' என்று சொன்னான். இதையெல்லாம் இப்படித்தான் அழைக்க வேண்டுமென்ற கட்டாயத்தை யாரும் அந்தப் பொதுமக்களுக்குச் சொல்லித்தரவில்லை. எனவே மொழியென்பது பொதுமக்கள் தாங்களாகவே தங்களுடைய உணர்வின் அடிப்படையிலே அழைத்துக் கொள்கின்ற, வழங்கிக் கொள்கின்ற ஒரு வழக்காக நாம் கருதவேண்டுமே தவிர, புலவர்கள் பார்த்து மொழிகளைத் தோற்றுவித்துப் பொதுமக்களிடத்திலே திணிக்க முடியாது, அப்படித் திணிக்கின்ற சொற்கள் அறிவியல் சொற்களாகத் தான் இருக்கமுடியும், நான் உங்களுக்குச் சில சொற்களைச் சொன்னால் அதனுடைய பொருளை நன்கு விளங்கிக்கொள்வீர்கள், காப்பி என்று சொன்னார்கள், காப்பி என்ற சொல்லை என்ன பொருளுடையது என்று தெரியாமலேயே நாம் வழங்கி வருகிறோம், ஒரு சொல்லைப் பொருளோடு வழங்குவதிலே ஒரு உண்மையான ஈடுபாடு ஒன்று உண்டு. பொருள் தெரிந்து வழங்குவதிலே சில விளக்கம் நமக்குக் கிடைக்கும். பொருள் தெரியாமல் வழங்குவதிலே சில அறிவு சில நிலைகளிலே முட்டுப் படும். எனவேதான் ஒவ்வொரு பொருளையும், ஒவ்வொரு சொல்லையும் பொருளோடு வழங்கவேண்டுமென்று பழம் பெரியவர்கள், அறிஞர்கள் நமக்கு அறிவுறுத்தினார்கள். அதனால்தான் எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்பதைத் தொல்காப்பியத்திலே ஒரு நூற் பாவாகத் தொல்காப்பியர் சேர்த்தார். எந்தச் சொல்லும் பொருளுடைய சொல்; பொருளில்லாமல் எந்தச் சொல்லையும் நாம் சொல்லக்கூடாது.

வளரும்

சன்சயின்
சோப்
ஈழம் எங்கும் விற்பனையாகிறது
-இது ஓர் லாலா தயாரிப்பு-
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

—6-ம் பக்கத் தொடர்

நீண்ட மௌன காலத்துக்குப் பிறகு மட்டுநகர் முதல்வர் இவ்வாறு உறுதியுரைக்க, தொடர்ந்து கவியேறு காசி முழங்குகிறார்;

"எவர் எப்படித்தான் போனாலும் எங்களுக்குப் பாதகமில்லை. எங்கள் ஒரே நோக்கம் கறைபடியாத தூய அரசியல் நோக்குத்தான், இந்த இலட்சியத்திலிருந்து நாங்கள் என்றுமே பின்னேக்கிப் போகமாட்டோம். இளைஞர்களின் சூருவளி ஆர்வத்தை எவராலும் தடுத்து மறிப்புப்போட முடியாது. உணர்ச்சி நிறைந்த இளைஞர்கள் மட்டுநகரை ஆக்கிரமித்துக் கொண்டார்கள். அவர்கள் தூய விடுதலைத் தலைவன் அண்ணன் அமிர் அவர்களுக்கே கட்டுப்பட்டவர்கள்.

நான் திரும்பத் திரும்பக் கூறுவேன் எங்கள் அணி தலைமைப்பீடத்துக்குக் கட்டுப்பட்டதே தவிர, வேறுபாதையை நாடாது வெல்க விடுதலை! மலர்க தமிழ்

—1-ம் பக்கத் தொடர்

ஒரு தலைப்பட்சமாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

இவை தவிர புதிய அரசியலமைப்பின்படி—

தமிழர்களை அடிமைகளாக்கி சிங்களவர்களை ஆள்பவர்களாக்கியுள்ள அதே ஒற்றையாட்சி--தொடர்ந்து நீடிக்கிறது.

தமிழ் பேசும்மக்களால் ஏற்றுக்கொள்ளப்படாத வாளேந்திய சிங்கக் கொடி

---

ஈழம்'' என்று கூறி தனது சொற்பொழிவைக் குறுக்கிக் கொண்டார்.

திருமலை பா. உ; இரா, சம்பந்தன் தனது பேச்சில் கட்சிக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்றும், இந்தக் காலகட்டத்தில் தமிழர்களுக்குள் பிரிவு ஏற்படக்கூடாதென்றும் ஒற்றுமைதான் முக்கிய தேவை என்றும் வலியுறுத்திக்கூறினர்.

(நமது நிருபர் ஆரையம்பதி ஆ. தங்கராசா)

யே 'இலங்கையின் தேசியக் கொடி'யாக அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (முந்திய அரசியலமைப்பில் இது இடம் பெறவில்லை.)

"நமோ நமோ மாதா, நம் சிறீலங்கா'' என்ற சிறீலங்காவின் தேசிய கீதத்தையே தமிழ் ஈழமுட்பட இலங்கை முழுவதற்குமான தேசிய கீதமாக குறிப்பிடுறது புதிய அரசியலமைப்பு.

பௌத்த மதத்துக்கு முதன்மைத் தானம் வழங்கப்படுவதோடு, பௌத்த மதத்தை பாதுகாத்தலும், பேணிவளர்த்தலும் அரசின் கடமையாக இருக்கவேண்டுமென்று கூறும் அரசியலமைப்பு, இதே உரிமையை இலங்கையின் ஏனைய மதங்களான இந்து, இஸ்லாமிய கிறித்தவமதங்களுக்கு வழங்க மறுத்துவிட்டது.

சிங்களம் மட்டுமே இலங்கையின் அரசகருமமொழியென்பது எதுவிதமாற்றமும் இன்றி அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது, இந்தஉரிமை தமிழ் மொழிக்கு வழங்கப்படவில்லை.

தாய்மொழியிலேயே ஒருவர் கல்வி கற்கவேண்டும் என்ற உரிமை, பாதுகாப்பு, புதிய அரசியலமைப்பில் வழங்கப்படவில்லை.

"ஆள் ஒருவர், எந்தவொரு தேசியமொழியிலும் கல்விகற்பதற்கு உரித்துடையராதல் வேண்டும்''

என்று கூறுகிறது புதிய அரசியலமைப்பு- இதன்படி, தமிழர்கள் விரும்பினல் சிங்களத்தில் கல்வி கற்பதற்கு வழிவகுக்கப்பட்டிருக்கிறது. சிங்களத்தை காலப்போக்கில் தமிழ் மக்கள் போதனமொழியாக ஏற்றுக்கொள்வார்கள் என்ற விஷமத்தனமான எண்ணத்துடனேயே, தாய்மொழியே போதனமொழி என்றுவரையறை செய்யாமல் "விரும்பிய் தேசிய மொழியில்'' கல்விகற்கலாம் என்று பொதுப்படையாகக் கூறிப் பொறிக்கிடங்கு தோண்டப்பட்டுள்ளது.

இவ்வாறு பல முனையிலும் தமிழினத்தையும், தமிழ் ஈழத்தையும் மேலும் அடிமைப்படுகுழிக்குள் தள்ளி வீழ்த்தும் புதிய அரசியலமைப்பில், அங்கொன்றும் இங்கொன்றுமாக இரண்டொரு அற்ப மொழிச்சலுகைகள் காணப்படுவது உண்மைதான் என்றாலும் வீரசுதந்திரம் வேண்டி நிற்கும் தமிழர்கள், இனிவேறென்று கொள்வாரோ?

---

## யாழ்ப்பாணத்தில் அசட்டு மாப்பிள்ளை

வரணியூரானின் 'அசட்டு மாப்பிள்ளை' நகைச்சுவை நாடகம் 15-7-78 சனிக்கிழமை மாலை 6-30 மணிக்கு யாழ் வீரசிங்கமண்டபத்தில் நடைபெறுகிறது.

---


# செல்லமகால்

கடைசி வாரம்

எம். ஜி. ஆர், ஜெயலலிதா, நம்பியார், அசோகன், நாகேஷ், மனேரமா நடித்த-

நடித்த—

# தனிப்பிறவி

(புதிய கொப்பி)

விரைவில் காணத் தயாராகுங்கள்!

கலைமகள் சங்கமிக்கும் திரையோவியம்

லிபர்ட்டி பிலிம்ஸ் அளிக்கும்

# தெய்வம் தந்த வீடு

(சினிமாஸ்கோப்)

தயாரிப்பு; வி. கே. டி பொன்னுசாமி

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

# கெயிட்டி [கொட்டாஞ்சேனை]

ஜெயசங்கர், லஷ்மி, விஜயலலிதா

நாகேஷ், மனேகர், ஸ்ரீ வித்தியா,

சகஸ்நாமம், வீ. எஸ். ராகவன், ஸ்ரீகாந்

-நடித்த-

# நூற்றுக்கு நூறு

—கதை—வசனம்—டைரக்ஷன்—

கே. பாலசந்தர்

# கிங்ஸ்லி

4-வது வாரம்

(கொழும்பு)

முத்துராமன், சுஜாதா,

சௌகார் ஜானகி,

தேங்காய் சீனிவாசன்,

சோ, மனேரமா — நடித்த,

# பெரும் புகழும்

6-வது வாரம்

# கெப்பிட்டல் பிளாசா

கமலஹாசன், ஆலம்—நடித்த

கே. பாலச்சந்தரின்

# மன்மத லீலை

(கலர்)

# லிடோ (யாழ்நகர்)

8-வது வாரம்

சிவகுமார், ஹிந்தி நடிகை அலகா, ஸ்ரீகாந்த், மனேரமா நடித்த-

# மதனமாளிகை

(கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 12, 194 ஏ, பண்டா[illegible] நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு ஜூலை 16-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுவெளியிடப்பட்டது; அச்சுப்பதிப்பு: வஸ்தியன் அச்சகம் பிரதான வீதி, யாழ்ப்பாணம்.